மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.34/2015

2024–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 03–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாலதி (Dw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.03.02.2025</u>

<u>பி.வா.சா.1</u>

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–</u>**

நான் இந்த வழக்கில் திருத்தப்பட்ட பிராதை முழுமையாக படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். அந்த பிராதின் படி தாவா புல எண்.240/2 ல் உள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1937 ல் மண்டபம் யாதவர் தெருவில் சர்வே செட்டில்மெண்ட் புல எண்.240 முழு எண்ணாக இருந்தது என்றால் சரிதான். 1963, 1965 யூடிஆரில் சர்வே எண்.240 ஆனது 240/1, 240/2 ஆக உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புல எண்.240/2 ல்மேற்கொண்டு எந்த உட்பிரிவும் செய்யப்படவில்லை, வருவாய் ஆவணங்களில்வண்டிப்பாதையும், வட்டக்கிணறாக அரசு புறம்போக்காக வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.240/1 இடையர் குடியிருப்பு என்ற வகைப்படுத்தி நத்தம் நிலவரி கணக்கீற்கு கொண்டு சென்று 240/3 முதல் 240/11 வரை உட்பிரிவு செய்யப்பட்டு நத்தம் மனைக்கட்டுகளாக வகைபபடுததப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.240/1 க்கு நம்புபிள்ளை பெயரில் பட்டா எண்.1569 என்றும், தில்லைஆறுமுகம் பெயரில் பட்டா எண்.1538 ம், இராமராஜ் பெயரில் பட்டா எண்.1577 ம், பெ.வேலாண்டி பெயரில் பட்டா எண்.1560, பெ.நாகுக்கோனார் பெயரில் பட்டா எண்.1969 ம், இருளப்பக்கோனார் பெயரில் பட்டா எண்.1365 ம், திருமலை பெயரில் பட்டா எண்.968 ம், பட்டா எண்.,1969 விபரங்கள் கண்டு 21.12.2023 ம் தேதி கூடுதல் எதிர்வழக்குரை பேரூராட்சி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புலஎண்.240/1 ல் ஏற்பட்டட 11 உட்பிரிவுகளில் எந்த உட்பிரிவிலும் வாதி பட்டா பெறவில்லை என்பது வருவாய் ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது என்றால் சரிதான். 1922 வா.சாஆ.2 ஆவணம் மூலம் சின்னக்குட்டி அம்மாள் மூலம் ஒரு சொத்தை கிரையம் பெற்றதாக வாதிகள் குறுக்குவிசாரணை செய்யும்போது கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதில் கிரையம் கொடுத்தவர் செல்லசாமி தேவர் என்றால் சரிதான். இந்த கிரைய பத்திரத்தில் போட்டுள்ள மேற்கு

S
ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.03 15:57:09 +0530

எல்லையும், வடக்கு எல்லையும் தில்லைமுத்து கோனார் தோட்டமும, வீடும் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சாஆ.3 ஒத்தி பத்திரத்திலும் சொத்திற்கு வடக்கு மேற்கு எல்லைகளாக தில்லைமுத்து கோனார் தோட்டமும், வீடும் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு வாதி 7 எண்ணிக்கையில் கிரைய ஆவண ஒத்தி பத்திரங்களில் வடக்கு மேற்கு எல்லைகளாக தில்லைமுத்து கோனார் தோட்டமும், வீடும் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்கே காளிமுத்து கோனார், சுப்பையா கோனார், வடக்கே நாகுக்கோனார், இருளப்பக்கோனார் என்று தான் அந்த 7 ஆவணங்களில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வசா.ஆ.2, 3 ஆவணம் பிவேர் பிளாக் சாலை அமைப்பதற்கு பேரூராட்சி மன்ற தீர்மானத்திற்கும், அதன் பெயரில் நான் பிறப்பித்த பணி ஒப்பந்தத்திற்கும் தொடர்பில்லாதவை மேலும் வாசா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆவணங்கள் 70 வருடங்களும், 108 வருடங்களும் பழமையானவை என்றாலும், அதனால் மேற்படி ஆவணங்களை படித்து பார்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணையில் அரசு துறை சம்பந்தப்பட்ட விபரங்கள் எனக்கு தெரியும் என்று சொல்லியிருப்பதில் நான் பணியாற்றும் உள்ளாட்சி துறை பற்றிய விபரங்கள் எனக்குதெரியும் என்றால் சரிதான். உள்ளாட்சியில் பேரூராட்சி நிர்வாகம் பற்றி எந்த சட்டத்தில் சொல்லப்பட்டுளளது என்றால் 1994 தமிழ்நாடு பஞ்சாயத்துசட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த சட்டப்படி உள்ளாட்சி துறையில் ஒவ்வொரு பேரூராட்சிக்கு நில அதிகார எல்லை பற்றி உள்ளது என்றால் சரிதான். பேரூராட்சியின் அதிகார வரம்பிற்குள் வாதிகள், வீடுகள் மற்றும் மின்விளக்குகள் வசதி செய்வது, மற்ற கட்டிடங்கள் உள்ள சகல நிலப்பகுதிகளிலும் சாலை அமைப்பது பராமரிப்பது, சாலைகளை ஒட்டி ஆழ்துழாய் கிணறு அமைத்து குடிநீர்வசதிகள் செய்து தருவது பேரூராட்சியின் அவசிய பணிகள் என்றால் சரிதான். புல எண்.240/2 என்பது மண்டபம் பேரூராட்சியில் 15 வது வார்டுக்கு போடப்பட்டது. அந்த சாலையை ஒட்டி தென்புறமுள்ள மாரியம்மன் கோவிலின் தென்புற சுவரை ஒட்டி ஏற்கனவே பஞ்சாயத்து சிமெண்ட்ட சாலை போட்டு அது மக்களின் பயன்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். அந்த புல எண்.240/2 ல் வருவாய்துறையால் வண்டிப்பாதை, வட்டக்கிணறு என்று வகைப்படுததி அது பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்துது என்றால் சரிதான், வண்டிப்பாதை நடைபாதையாக பயன்பாட்டில் இருந்தது, வட்டக்கிணறு அவ்வப்போது துார்வாரியும், மராமத்து செய்தும் பேரூராட்சியின் பணிகள் நடந்து வந்தது. புல எண்.240/2, 240/1 லும் 6 மின் கம்பங்கள் அமைத்து ட்யூப் லைட்கள் போட்டு அதற்கான மின் கட்டணத்தையும் பேரூராட்சி செலுததிவருகிறது என்றால் சரிதான். அதே வடக்கு சாலையில் 9 இடங்களில் குடிநீர் தொட்டி அமைத்து காவிரி கூட்டுக்குடிநீர் இணைப்பு பெற்று குடிநீர் வழங்கி பேரூராட்சி பராமரித்து வருகிறது என்றால் சரிதான். பேரூராட்சியின் பணிகள் 50 வருடங்களாக நடைபெற்று வருகிறது, எனவே மக்கள் நலன்சேவைகளை செய்வதற்சுகு யாருடைய அனுமதியும் புதியதாக பெறும் நிலை

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.02.03 15:57:14 +0530

இல்லைஎன்றால்சரிதான். புல எண்.240/2 தனக்குரியது என்று வாதி ஏதாவது உரி மை ஆவணத்தையோ, வருவாய் துறையின் 9(2) நோட்டீஸ், பட்டா எதையும் தாக்கல் செய்து உரிமையை நிலைநாட்டிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வாசா.ஆ.13 கிரைய ஆவணம் ராஜவேலு என்பவருக்கு வாதி வகையறா 11.07.2001 ல் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான்.அந்த சொத்திற்கு கிரைய தேதியில் 240/8 என்றும், புதிய புல எண்.240/1 என்றும் குறிப்பிடப்பட்டுளளது என்றால் சரிதான். புல எண்.240/2 ல் கிரைய பத்திரத்தில் கட்டுப்பட்ட சொத்து ஒரே item தான் இரண்டு item கள் அல்ல என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.,ஆ 6 240/8 நத்தம் மனை என்றும், அது நிலுவை என்றும் வைக்கப்பட்டுளளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் புல எண்.240/8 என்பது ராஜவேலு தோட்டம் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான், வா.சாஆ.13 ஆவணத்திற்க்கு பின்பு 11.07.2001 தேதிக்கு பிறகு தாவா சொத்து தொடர்பாக வேறு ஏதாவது பதிவு செய்யப்பட்ட வாதி தரப்பு ஆவணங்கள் என்னிடம் காட்டப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் 1922 க்கும் 1968 க்கு இடையே கிரைய ஒத்தி விபரங்கள் பற்றி வாதி வகையறாவுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த தேதியில் வாதியோ, அவரது உடன்பிறந்தவர்களோ பிறக்கவில்லை என்றால் சரிதான். 1968 வா.சா.ஆ.1 மூலம் வாதிகளின் தகப்பனார் பெற்ற கிரைய ஆவணத்தில் கூறப்பட்டுள்ள நான்கு எல்லைகளுக்கு உட்பட்டு அந்த நான்கு எல்லைகளையும் ஒப்புக்கொண்டு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். கிரையம் பெற்ற பத்திரத்தில் தாவா சொத்திற்கு கிழக்கு எல்லையாக கோவிந்தக்கோனார் நிலத்திற்கும், மாரியம்மன் கோவிலுக்கு கிணற்றிற்கும் மேற்கு என்ற விபரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிகளின் தகப்பனார் 23.02.1978 ல் கிருஷ்ணக்கோனாருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.6 ஒத்தி பத்திரத்திலும், 22.08.1985 தேதியில் சுரேஷ் நம்புக்குமார் என்பவருக்கு எழுதிக்கொடுதத வா.சா.ஆ.7 அடமானபத்திரத்திலும் தாவா 2 வது இலக்க சொத்திற்கு கிழக்கு எல்லையாக கோவிந்தக்கோனார் வீட்டையும், நிலத்தையும்குறிப்பிட்டு எழுதிக்கொடுததுள்ளார் என்றால் சரிதான். 19.09.1994 வாதி சுரேஷ் நம்புக்குமாரிடம் இருந்து தாவா சொத்துக்களை பொறுத்து எழுதிப்பெற்ற அடமான made over பத்திரத்தில் தாவா 2 வது இலக்க சொத்திற்கு கிழக்கு எல்லையாக கோவிந்தக்கோனார் வீடு கட்டியிருக்கும் நிலத்திற்கு மேற்கு என்று குறிப்பிட்டு எழுதி வாங்கியுள்ளார். அதனால் அந்த கிழக்கு எல்லையை வாதிகளோ, அவருடைய முன்னோர்களோ ஆட்சேபிக்க முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.12 அடமான பத்திரத்தில் 2 வது இலக்க சொத்திற்கு கிழக்கு எல்லையாக கோவிந்தக்கோனார் வீடு கட்டியிருக்கும் நிலத்திற்கு மேற்கு என்று வாதியும், அவருடைய தாயார் மற்றும் அவரது உடன்பிறந்தவர்களும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆவணத்திலும் அதே கிழக்கு எல்லை கண்டு தான் வாதி வகையறா கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். 1937 ல் இரமநாதபுரம் சமஸ்தான

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.02.03 15:57:19 +0530

நிலங்கள் உள்ள மண்டபம் கிராமம் அதிகாரிகளால் சர்வே செய்யப்பட்டு பைமாஸ் நம்பர் என்று கொடுக்கப்பட்டது, அது தான் தற்போதையா சர்வே எண்கள் என்றால் சரிதான். பைபாஸ் நம்பர் கொடுக்கப்பட்ட காலத்தில் தாவா சொத்தின் சொத்து அனுபவத்தில் இருந்தவர்கள் விண்ணப்பித்திருப்பார்களேயானால் அந்த சொத்து புறம்போக்காக இல்லாமல் தனிநபர் சொத்தாக இருந்திருந்தால் நிச்சயமாக அந்த நபர் பட்டா வாங்கியிருக்க முடியும் என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.2 1922 கிரைய ஆவணத்தில் மாரியம்மன் கோவில் நிலமும், வட்டக்கிணறும், கோவிந்தக்கோனார் வீடு கட்டியிருகின்ற இடமும் சொல்லபப்டவில்லை என்றால் சரிதான் என்று சொல்லியுள்ளது தவறு ஏனென்றால் கோவிந்தக்கோனார் வீடு 1968 ல் தான் கட்டப்பட்டது 1922 ஆவணத்தில் இருக்காது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஒத்தி பத்திரத்தில் 15.05.1954 ம் தேதி எழுதப்பட்டது எனவே 1968 ல் கட்டப்பட்ட கோவிந்தக்கோனார் வீடு அதில் இருக்காது என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 3 ஆவணங்களில் 1922, 1954 ல் எழுதப்பட்டுள்ளதால் அதில் கோவிந்தக்கோனார் வீடு இருக்காது, இராமநாதபுரம் சமஸ்தான நிலம் மற்றும் வட்டக்கிணறு என்று தான் எழுதப்பட்டிருக்கும் என்றால் சரிதான். சமஸ்தான இடத்தில் தான் வண்டிப்பாதை, வட்டக்கிணறு மற்றும் மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எனது தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ததாக வாக்குமூலத்தில் போடப்பட்டுள்ளதால் அந்த விபரங்கள் எனக்கு தெரியாது என்று குறுக்கு விசாரணையில் கூறியுள்ளது தவறு ஆகும். குறுக்கு விசாரணையில் புல எண்.240/1 ஆனது 1 முதல் 11 உட்பிரிவுகளாக செய்யப்பட்டட விபரம் தெரியாது என்று நான் சாட்சியமளித்துள்ளது தவறு எனது நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 1, 2 ல் அந்த விபரங்களை தான் முழுமையாக கூறியுள்ளேன். குறுக்கு விசாரணையில் சம்பந்தப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் தெரியாது என்று சொல்லியிருப்பது தவறு ஏனென்றால் எனது நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 1,2 ல் 240/1ன் மொத்த விஸ்தீரணம் 0.12.50 ஹெக்டேர்ஸ் என்றும், 240/2ன் மொத்த விஸ்தீரணம் 0.04.50 ஹெக்டேர்ஸ் என்றும் போடப்பட்டுள்ளது. 240/1ல் 11 உட்பிரிவுகளாக செய்யபட்டதை வண்டிப்பாதையாக வருவாய்துறை எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்று சொல்லியுள்ளதில் காரணம் சர்வே எண்.240/1ல் 1 முதல் 11 உட்பிரிவுகளும் நத்தம் மனைக்கட்டுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அந்த உட்பிரிவுகளை வண்டிப்பாதையாக பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவேண்டிய நிலை இல்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் புலஎண்.240/2 மட்டும் தான் வண்டிப்பாதை, வட்டக்கிணறு, சர்க்கார்புறம்போக்கு என்று முதல் பக்கத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணையில் பக்கம் 8 ல் தனிநபர் சொத்தை தான் பத்திரப்பதிவு துறையில்பதிவு செய்ய முடியும் என்று கூறியுள்ளதில் இந்த வழக்கு சொத்து புல எண்.240/2 வாதி குமாருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் தனித்த பாத்தியமான சொத்தாக இருந்து வந்தது என்று நிரூபிக்கக்கூடிய ஆவணம் எதையும்

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.02.03 15:57:25 +0530

என்னிடம் தாக்க்ல செய்யவோ, நான் பார்வையிடவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டப்படி வருவாய் துறையில் மனு அனுப்பி கேட்டதில் சர்வே எண்.240ல் உள்ள சொத்துக்களை மண்டபம் பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்யவில்லை என்றும் சொல்லியுள்ளேன் ஆனால் நான் RTI சட்டப்படி வாதி தரப்பில் வருவாய் துறைக்கு அனுப்பப்பட்ட மனு என்ன, வருவாய் துறையின் பதில் என்ன என்பதை என்னிடம் காட்டப்படவோ, நான பார்வையிடவோ இல்லை என்றால் சரிதான். எனது குறுக்கு விசாரணையில் எதிர்வழக்குரை, கூடுதல் எதிர்வழக்குரையில் வாசுகிநாதன் வீட்டு சந்தில் எத்தனை அடியில் சாலை போடப்பட்டதாக சொல்லவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அளவுகள் இல்லை. எனது குறுக்கு விசாரணையில் பக்கம் 9ல் வாதியும், அவரது உடன்பிறந்தவர்களும் தாவா 1, 2 இலக்க சொத்துக்களை 1922ல் இருந்து அனுபவம் செய்து வந்ததால் தான் அவர்களால் கிரைய, அடமானம், ஒத்தி போன்றவை செய்து கொடுக்கமுடிந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு ஆகும். 1922ல் சேதுக்கோனாரும், அவரது மனைவியும்பிறக்கவில்லை, இந்த வாதி வகையறாவும் பிறக்கவில்லை, வாதியும், அவரது உடன்பிறந்தவர்களும் 1970க்கு பிறகு தான் பிறந்துள்ளார்கள் என்பது பிராதில் தெரிகிறது என்றால் சரிதான். 01.06.2016ல் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் அரசுக்கு சொந்தமான நிலத்தை வாதி எப்படியாவது அடைந்துவிடவேண்டுமென்று வழக்கை தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். 08.07.2015ல் வாதி வழக்கை தாக்கல் செய்துள்ளார் அதன்பிறகு வருவாய் துறைக்கும், காவல்துறைக்கும் அனுப்பிய வா.சா.ஆ.17 ஆகிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவைகளை என்னிடம் காட்டியபோது ஆவணங்களை அனுப்பியது மட்டும் சரிதான் என்று சொல்லியுள்ளேன். வாதி இந்த வழக்கையும் சிவில் வழககையும்தெருவாசிகள் மீது கொடுத்த புகார் மனுக்களை என்னிடம் காட்டி கேட்டபோது புகார்மனுக்ககள் அனுப்பப்பட்டது சரிதான் என்று குறுக்கு விசாரணயில் சொன்னேன் என்றால் சரிதான் அதன் உள்ளடக்கத்தின் உண்மை தன்மை பற்றி எனக்கு தெரியாது. அந்த புகார் மனுக்களுக்கும், நாங்கள் பேரூ'ராட்சி சாலை அமைக்க அனுமதி கொடுத்ததற்கு எந்த தொடர்பும் இல்லை என்றால்சரிதான். பொதுமக்கள் கோரிக்கை மனுக்கள் கொடுத்தார்கள், அதன் பெயரில் ஊராட்சி மன்றம் சாலை அமைக்க தீர்மானம் போட்டதும்ஒன்றுக்கொன்று தொடர்புடையதுதான் ஆனால் குறுக்கு விசாரணையில் அவை இரண்டும் முரண்பட்ட கருத்துக்கள் என்று சொல்லியிருப்பது தவறு ஆகும். வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.18 வில்லங்க சான்றிதழ் என்று சாட்சியம் சொல்லியுள்ளேன் அது தவறு ஆகும் வா.சா.ஆ.18 ஆவணம் பருபதபர்த்தினி என்பவர் இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு அனுப்பிய பட்டா கோரும் மனு என்றால் சரிதான். வாதி ஆயுள் காப்பீடு செய்தபோது 19.07.1994ல் வழங்கப்பட்ட வாரிசுகளில் அவர் மண்டபம் யாதவர் தெருவில் எந்த கதவு எண் உள்ள வீட்டில் குடியிருந்து வந்தார் என்பதை காட்டும விபரம் இல்லை என்றால்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.03 15:57:31 +0530

சரிதான். 2ம் பிரதிவாதி ராஜேஸ்வரன் ஒப்பந்ததரார் இல்லை என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான் என்று வாக்குமூலம் அளித்துள்ளேன் எனது பதில் ஏற்க முடியாது என்றால் எங்கள் பேரூராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததரார் பட்டியல் இருப்பதால் அந்த ஒப்பந்ததாரர்கள் பற்றிய விபரத்தை மட்டுமே அளிக்க முடியும், ஒப்பந்ததாரர் அல்லாதவர் விபரம் அளிக்க முடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.26 வீட்டு வரிரசீதுகளைபார்வையிட்டு 1922 முதல் 2001 வரை வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்ததற்கு அந்தவீட்டுவரி ரசீதுகள் அவர்கள் அனுபவத்தை உறுதிசெய்துள்ளது என்று நான் வாக்குமூலம் அளித்துள்ளது தவறு ஆகும் 2016 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதி ராஜேஸ்வரன் என்பவருக்கு எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் வழங்கப்படவில்லை, இந்த வழக்கிற்கும், அவருக்கு எந்த தொடர்பும் இல்லை, அவர் வாதியால் தவறாக சேர்க்கப்பட்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ளது அதற்கு பின்னரும் வாதி சரியான ஒப்பந்ததாரரை பிராதில் சேர்ப்பதற்கு முயற்சி எடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது அரசு அதிகாரியான நான் தீர்ப்பும் வரை காத்திருக்க வேண்டுமென்று குறுக்கு விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் சாலை அமைத்து முடித்த பிறகு தான் இந்த வழகது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான் எனவே அவருடைய கேள்வி பொருத்தமற்றது என்றால் சரிதான். வேப்பமரத்தை தான் மாரியம்மன் கோவிலாக வழிபாடுவார்கள் என்று சொல்லியுள்ளேன் தமிழ்நாட்டில் லட்சக்கணக்கில் வேப்பமரங்கள் உள்ளது ஆனால் அவை எல்லாம் மாரியம்மன் கோவில் இல்லை என்றால் சரிதான்.

**<u>நீதிமன்ற மறு விசாரணை:-</u>**

வாதிதரப்பில் தாக்கல் செய்யப்பட் வா.சாஆ.1 முதல் மற்ற ஆவணங்களாக கிரைய ஒத்தி ஆவணக்ஙளைபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. குறுக்கு விசாரணையில் வாதி, பிரதிவாதி தரப்பில் ஆவணங்களை பற்றி கேட்டதால் தெரியும் என்று சாட்சியமளித்துள்ளேன். நான் மண்டபம் பேரூராட்சி செயல் அலுவலராக சாட்சியமளித்துளளேன். நான் மண்டபம் பேருராட்சியால் போடப்பட்ட மண்டபம் யாதவர் தெருவில் பிவேவர் பிளாக் சாலை அமைத்தது பற்றி எனக்கு தெரியும் மற்றபடி இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. மற்றபடி குறுக்கு விசாரணயில் இவ்வளவு நேரம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.03 15:57:35 +0530